‘நீட்’ தேர்வை முற்றிலுமாக ரத்து செய்திட

# தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் உடனடி திருத்தங்கள் தேவை!

## மாநிலங்களவையில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 5-

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் மாநிலங்களவையில் உரையாற்றிய கழக உறுப்பினர் - மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், “‘நீட்’ தேர்வை முற்றிலுமாக ரத்து செய்திட தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் உடனடியாக திருத்தங்கள் கொண்டு வர வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பேசியதாவது:-

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட்ட உரையினை வழங்கியுள்ள குடியரசுத்தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எனது தேசம் மற்றும் எனது மாநிலத்தின் உரிமைகளுக்காக வாதிட நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

**நீட் : 23.33 லட்சம் தேர்வர்கள் பாதிப்பு!**

**I.முதலில் நீட் தேர்விலிருந்து துவங்க விரும்புகிறேன்..**

நீட் அடிப்படையிலான தேர்வு முறை ஏழை மற்றும் பின்தங்கிய பின்புலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிரானது என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு எப்போதும் எம்.பி.பி.எஸ் தேர்வு செயல் முறையை தனி நுழைவுத் தேர்வாக இல்லாமல் +2 மதிப்பெண்கள் அடிப்படையிலேயே தேர்வு செய்கிறது. இத்தகைய நீட் அடிப்படையிலான தேர்வு முறையானது எம்.பி.பி.எஸ். படிக்க விழையும் மாணவர்களுக்கு மிகுந்த உளவியல் அழுத்தத்தையும், அவர்களின் குடும்பங்களுக்கு நிதிச் சுமையையும் அளிக்கிறது.

நீட் அச்சுறுத்தலைத் தவிர்ப்பதற்காக, ‘தமிழ்நாடு இளநிலை மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கை மசோதா, 2021’ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.09.2021 அன்று நிறைவேற்றப்பட்டு, தமிழக ஆளுநர் அவர்களால் மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது.

நீட் தேர்வானது மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மனதில் மிகுந்த கவலையையும், மன அழுத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சமீப காலமாக நாடு பெரிய அளவிலான குழப்பங்களைக் கண்டு வருகிறது. வினாத்தாள் கசிவு தொடங்கி, தவறான பதில்களுக்கான கருணை மற்றும் ஈடுசெய்யும் மதிப்பெண்களை ஒழுங்கற்ற முறையில் வழங்கியதன் காரணமாக, 2024 இளநிலை நீட் தேர்வினால் கிட்டத்தட்ட 23.33 லட்சம் தேர்வர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், உச்சநீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, சி.பி.ஐ., விசாரணைக்கு உத்தரவிடவும் வழிவகுத்துள்ளது.

**நீட் தேர்வை ரத்து செய்க!**

மேற்கண்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு, நீட் தேர்வை முற்றிலுமாக ரத்து செய்வதே தமிழக அரசின் தற்போதைய கொள்கையாக இருந்து வருகிறது. மேலும், மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் தமிழகத்திற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கக் கோரி அல்லது நீட் தேர்வை முற்றிலுமாக ரத்து செய்யக் கோரி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, தேசிய அளவில் நீட் தேர்வு முறையானது கைவிடப்படும் வகையில், இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ள மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் உடனடியாக திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்று ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறோம்.

தகுதிக்கான தேர்வாக இருப்பதற்குப் பதிலாக, தேர்வுத் தாள்களை வீடுகளில் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு மூலமோ அல்லது அமேசான் போன்ற தளங்கள் வாயிலாகவோ கூட வாங்க முடியும் மற்றும் முடிவுகளை எளிதில் மாற்ற முடியும் வகையில் NEET என்பது மோசடிகள் மற்றும் ஊழலின் உலகமாக மாறியுள்ளது. 720/720 எனும் முழு மதிப்பெண்கள் பெற சில தேர்வு மையங்களில் மாணவர்களிடம் இருந்து பணம் வாங்கிக்கொண்டு தேர்வெழுதும் மோசடியாளர்களையும் வைத்திருக்க கூடியதாக உள்ளது.

2010ஆம் ஆண்டு விதிமுறைகள் மூலம் நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட போது, அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இந்த தேர்வுக்கெதிராக ரிட் மனு தாக்கல் செய்யும்படியும் தடையாணை பெறும்படியும் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

இந்த வழக்கில் நான் ஆஜராகி வாதாடினேன்.. அதன் காரணமாக சென்னை உயர் நீதிமன்றம் நீட் தேர்வை அமல்படுத்த இடைக்கால தடை விதித்தது. அந்த வகையில் அநீதியோ, ஏற்றத்



தாழ்வுகளோ எப்போதெல்லாம் நடக்கிறதோ அப்போதெல்லாம் தமிழகம் முதலில் குரல் கொடுத்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளரும், தமிழ்நாட்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நீட் தேர்வுக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டார். அதில் 80 லட்சம் பேர் நீட் தேர்வுக்கு தடை கோரி கையெழுத்திட்டனர்.

**நீட் விலக்கு மசோதா: காலதாமதம் ஏன்?**

தமிழக அரசால் அனுப்பப்பட்டுள்ள நீட் விலக்கு மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் அவர்களிடம் இருந்து ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது என ஒன்றிய அரசிடம் கேட்க விரும்புகிறேன்.

சி.பி.ஐ. விசாரணையும் கூட மிகவும் தாமதமாகத் தான் இருந்தது, ஒரு சில மாணவர்கள் நீதிமன்றம் சென்ற பிறகுதான் அத்தகைய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடுவதில் 48 நாட்கள் தாமதம் ஏற்பட்டுள்ளது, மேலும் இந்த தாமதம் மோசடி செய்த வர்களுக்கு ஆவணங்களை சேதப்படுத்தவும் ஆதாரங்களை அழிக்கவும் உதவியுள்ளது.

மற்றொரு வியத்தகு விஷயம் என்னவென்றால், நாடாளுமன்றத்தில் “பொதுத் தேர்வு (நியாயமற்ற வழிமுறைகளைத் தடுப்பது) மசோதா 2024” 9.2.2024 அன்று நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் அவர்கள் 12.2.2024 அன்று ஒப்புதல் அளித்தார்.

ஆனால், வினாத்தாள் கசிவு மோசடி நடந்த பிறகு, 21.6.2024 அன்றுதான் இச்சட்டம் அறிவிக்கப்பட்டது என்பது அதிர்ச்சியளிக்கிறது.

பொதுத் தேர்வுச் சட்டம் 2024ன் நோக்கம், தேர்வுகளில் முறைகேடுகளைத் தடுக்க கடுமையான விதிகளைக் கொண்டுவருவதாகும், ஏனெனில் நியாயமற்ற வழிமுறைகள் அல்லது வினாத்தாள் கசிவு போன்ற குற்றங்களுக்கு கையாள்வதற்கு உரித்தான சட்டம் என்று எதுவும் இல்லை. இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிட ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளது. எனது கேள்வி என்னவென்றால், 12.2.2024 அன்றைக்கே சட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையிலும், இந்தச் சட்டம் ஏன் தாமதமாக ஜூன் 2024 ல் அறிவிக்கப்பட்டது என்பதுதான்.. தேசிய தேர்வு முகமையின் அதிகாரிகள் இனி இந்த பொதுத் தேர்வு சட்டத்தின் பிடியில் இருந்து எளிதாக தப்பிவிடுவார்கள்.

**கோடிக்கணக்கான நிதி ஏன்?**

வியக்கத்தக்க வகையில், நீட் உட்பட 14 க்கும் மேற்பட்ட முக்கியமான போட்டித் தேர்வுகளை நடத்துவதற்கு பொறுப்பான தேசிய தேர்வுகள் முகமையானது, மற்ற குடியிருப்பு உரிமையாளர்கள் வீட்டுவசதி சங்கங்களைப் போலவே சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பொறுப்பு கூறல் இல்லாத ஒரு அமைப்புக்கு கோடிக்கணக்கான நிதி வழங்கப்படுகிறது.

2014 முதல் 2024 வரை, மக்களவையில் 427 மசோதாக்களையும், மாநிலங்களவையில் 365 மசோதாக்களையும் இந்த அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. இருப்பினும், தேசிய தேர்வு முகமைக்கு சட்டப்பூர்வ ஆதரவை வழங்குவதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசு ஆர்வம் காட்டவில்லை. அத்தகைய சட்டம் இல்லாததால், தேசிய தேர்வு முகமையானது பொறுப்புக்கூறலைத் தவிர்க்கவும், ஊழல் அல்லது சட்ட விரோத நடவடிக்கைகளுக்காக எந்த எதிர்விளைவுகளையும் சந்திக்காமல் இருக்கவும் அனுமதிக்கப்படுகிறது.

இவ்வளவு முக்கியமான தேர்வுகள் ஏன் தகுதியற்ற ஒரு அமைப்புக்கு வழங்கப்பட்டன மற்றும் இத்தகைய முறைகேடுகளுக்கு ஏன் அவர்களை பொறுப்பேற்க வைக்க முடியவில்லை என்பதற்கு எந்த பதிலும் இல்லை.

**மாநிலப் பிரச்சினைகள் - சென்னை மெட்ரோ இரயில் திட்டம்!**

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டத்தினை ஒன்றிய அரசும், தமிழக அரசும் 50:50 என்ற விகிதத்தில் ஒரு கூட்டு முயற்சியாக நிறைவேற்றியது. இதே போன்று, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை ரூ.63,246 கோடி ரூபாய் செலவில் 119 கிலோமீட்டர் தொலைவிற்கு அமல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டப் பணிகளானது, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களால் 21.11.2020 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. 2021-22 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய பட்ஜெட்டில் இதற்கு நிதியுதவி அறிவிப்பு வெளியிடப்பட்டது, ஆனால், அதன் பிறகு எந்த முன்னேற்றமும் இல்லை.

இந்த திட்டமானது, 17.8.2021 அன்று பொது முதலீட்டு வாரியத்தால் (PIB) பரிந்துரைக்கப்பட்டாலும், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் (CCEA) ஒப்புதலுக்காக இன்னும் காத்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் பரிந்துரைக்குப் பிறகு, பொது முதலீட்டு வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட பல மெட்ரோ திட்டங்களுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் பகுதியின் அவசரத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி தமிழக அரசு இரண்டாம் கட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இதற்கான செலவினம் மாநில நிதியிலிருந்து தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் மூலம் திட்டச் செலவினங்களானது, பணிகள் சரியான பாதையில் செல்வதை உறுதிப்படுத்தினாலும், இந்த செலவினத்தால் மாநிலத்தின் நிதி நிலைமை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. எவ்வித தாமதமும் இன்றி, இந்த நிலை சரிசெய்யப்பட வேண்டும்..

எனவே, அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று, 50 சதவீதம், அதாவது ரூ.31,623 கோடியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**தேசிய பேரிடர் நிவாரண நிதி**

2023 டிசம்பரில் தமிழகம் வரலாறு காணாத இரண்டு இயற்கை பேரிடர்களை சந்தித்தது. ‘மிக்ஜாம்’ புயலால் மிக அதிக மழை பெய்தது மற்றும் மாநிலத்தின் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் 2023 டிசம்பரில் வரலாறு காணாத அளவுக்கு கனமழை பெய்தது. இதன் காரணமாக அரசு மற்றும் தனியார் உள்கட்டமைப்புகளும், மக்களின் வாழ்வாதாரங்களும் சீர்குலைந்துள்ளன. ஒன்றிய குழுவின் அதிகாரிகள் பார்வையிட்டு சேதங்களை மதிப்பீடு செய்த பிறகு, மாநில அரசு ரூ.37,907.21 கோடியை இழப்பீடாகக் கோரியது.

ஆனால், மத்திய அரசு 26.4.2024 அன்று தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.276 கோடி மட்டுமே இழப்பீடாக வழங்கியுள்ளது. இயற்கைப் பேரிடர்களின் அளவையும், உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சேதத்தையும் கருத்தில் கொண்டால், இந்த இழப்பீட்டுத் தொகையானது முற்றிலும் போதுமானதல்ல மற்றும் இது தமிழ்நாட்டிற்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகும். எனவே, மறுசீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும், மாநில அரசுக்கு ஏற்கனவே ஏற்பட்ட செலவினத்தை ஈடுகட்டுவதற்கும் குறைந்தபட்சம் ரூ.3,000 கோடியை உடனடியாக தேசிய பேரிடர் நிவாரண நிதியின் கீழ் வழங்க வேண்டும்..

**சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு!**

1931 ஆம் ஆண்டுக்குப் பிறகு சமகாலத் தரவுகள் எதுவும் இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. எனவே, சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பினை உடனடியாகத் துவங்க வேண்டும்.

**தமிழகத்தில் புதிய ரயில்வே திட்டங்களுக்கான ஒப்புதல் கோரல்:**

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கீழ்க்கண்ட இரயில்வே திட்டங்கள் மிகவும் முக்கியமானவையாகும். இவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

1. தாம்பரம் - செங்கல்பட்டு இடையே 4வது இருப்புப் பாதை
2. திருப்பத்தூர் கிருஷ்ணகிரி -ஒசூர் புதிய வழித்தடம்.
3. மதுரை - தூத்துக்குடி வழி - அருப்புக்கோட்டை (143.5 Kms) (18 கி.மீ மட்டுமே ஆணை அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவற்றிற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்).
4. மீஞ்சூர் - திருவள்ளூர் - ஸ்ரீபெரும்புதூர் - ஒரகடம் சிங்கப்பெருமாள்கோவில் - மதுராந்தகம்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பேசினார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் ஏற்பாட்டில் காணை ஒன்றியம், கெடார் ஊராட்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரராஜா, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பாஸ்கர், மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன், ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், மாமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், களப்பணியாளர்கள் உடனிருந்தனர்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பல்லாவரம் வடக்கு & தெற்கு பகுதி தி.மு.க. மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க.வுக்கு தேர்தல் பணியாற்ற ஒதுக்கப்பட்டுள்ள நந்திவாடி ஊராட்சி பாக எண் 137–க்கு உட்பட்ட பகுதிகளில் ஊராட்சி தேர்தல் பணி பொறுப்பாளர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. பாக பொறுப்பாளர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன் முன்னிலையில் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அன்னியூர் சிவாவை வெற்றி பெற செய்யுங்கள் எனக்கூறி வாக்கு சேகரித்தார். உடன் ரமேஷ், ச.சிவகுமார், ஜெ.வி.சந்திரசேகர், ஜி.கருணாமூர்த்தி, கோ.ஜானகிராமன், ஜெ.இன்சமாம், லோ.டில்லிபாபு, எம்.கமல்ராஜ், பி.கிஷோர், மணிரத்தினம், ஏ.டீசல்ராஜா மற்றும் நந்தி வாடி ஊராட்சி கழக செயலாளர் டீ.சாரதி, ஊராட்சி கழக நிர்வாகிகள் இருந்தனர்.

வீடு வீடாகச் சென்று

# விக்கிரவாண்டியில் ஐ.பி.செந்தில்குமார் வாக்குச் சேகரிப்பு!

விக்கிரவாண்டி, ஜூலை 5 -

விக்கிரவாண்டி இடைத்தேர்தலை முன்னிட்டு சோழனூர் மற்றும் சோழாம்பூண்டி ஊராட்சி பகுதிகளில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று தமிழக அரசின் சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

தமிழகத்தில் நடைபெற உள்ள விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு அங்கு போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா மாபெரும் வெற்றி பெற தி.மு.க. நிர்வாகிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஊராட்சி, பேரூராட்சி, வார்டுகளில் தீவிரமாக பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகின்றனர்.


திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க.விற்கு விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட சோழாம்பூண்டி, சோழனூர், கிராம ஊராட்சிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும், தி.மு.க. மாநில துணை பொதுச் செயலாளருமான ஐ.பெரியசாமி அவர்கள் உத்தரவுப் படியும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் பம்பரம் போல் சுழன்று தேர்தல் பணியில் ஈடுபட்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகின்றனர். நேற்று சோழாம்பூண்டி, சோழனூர் ஊராட்சி பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உத்தரவின் படி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் நூற்றுக்கணக்கான தி.மு.க.வினர் வீதி வீதியாகச் சென்று தமிழக அரசின் சாதனைகளை சொல்லி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா மாபெரும் வெற்றி பெற உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

பிரச்சாரத்திற்கு தலைமை தாங்கிய திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் தமிழகம் பெற்றுள்ள வளர்ச்சிகள் மற்றும் சாதனை திட்டங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வீடு வீடாகச் சென்று வழங்கினார். அப்போது அப்பகுதி மக்கள் தங்கள் வாக்கு என்றும் உதயசூரியனுக்கே என உறுதியளித்ததோடு விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அன்னியூர் சிவா மாபெரும் வெற்றி பெறுவார்கள் என்று கூறினார்கள். அதன்பின்னர் தொடர்ந்து தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஐ.பி.செந்தில்குமார் அவர்களுடன் இணைந்து வீதி வீதியாகச் சென்று பிரச்சாரம் செய்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**இராசிபுரம் கே. இராமசாமி**

**ஜூலை 5 (2000)**



சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.

இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனநராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு “மாநில சிறந்த கூட்டுறவாளர்” விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**